**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 30.10.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**உயிர்தொழில்நுட்ப மகத்துவ மையம் (COXBIT) மற்றும் தமிழ்நாடு உணவு பதப்படுத்தல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு கழகம் (TNAPEx) இணைந்து தொடக்க நிறுவனங்களுக்கான பயிற்சித் திட்டம்**

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக, உயிர்தொழில்நுட்ப மகத்துவ மையத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான செயல்திட்ட தயாரிப்பு குறித்த பயிற்சி வகுப்பு 29.10.2025 அன்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி தமிழ்நாடு உணவு பதப்படுத்தல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு கழகம் (TNAPEx) சார்பில் RAMP திட்டத்தின் கீழ் நடைபெற்றது. இதன் நோக்கம் தமிழ்நாட்டின் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புதுமை, தயாரிப்பு மேம்பாடு மற்றும் போட்டித்திறனை உயர்த்துவதாகும்.

TNAPEx–RAMP திட்டத்தின் கீழ், புதிய தயாரிப்பு மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப உதவிக்காக 10 சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) மற்றும் உயிர்தொழில்நுட்ப மகத்துவ மையம் (COXBIT) மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு நிறுவனத்திற்கும் உணவு பதப்படுத்தல் மற்றும் மதிப்பூட்டல் துறையின் கீழ் புதிய தயாரிப்பு மேம்பாட்டுக்காக ரூ.1,00,000 நிதி உதவி வழங்கப்படுகிறது. அவை: அவைவா ஆர்கானிக் (M/s. Aviva Organics Stores), தென்னைவனம் (M/s. Thennaivanam), பபுல்பாக்ஸ் (M/s. Bublbox E–Retail Pvt. Ltd), ஷெர்பா பயோடெக் (M/s. Sherpa Biotech), கிராப்டுவின் (M/s. Croptwin Agro Tech Pvt. Ltd), நேச்சுரல் மில்ஸ் (M/s. Nature Mills Pvt. Ltd), மைக்கோ என்ரிச் புட்ஸ் (M/s. Myco Enrich Foods), பேச்சி புட்ஸ் (M/s. Pechi Foods Pvt. Ltd), சுவிட் சஸ்டைனபுள் டெக்னாலஜி (M/s. Ziwwit Sustainable Technologies Pvt. Ltd).

பர்வீன் பானு தமிழ்நாடு அரசு சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். திரு. அதுல் ஆனந்த் இ.அ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். அவர் தனது சிறப்புரையில் TNAPEx–RAMP

திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களிடம் மதிப்பூட்டல், புதுமை மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மேலும், கலந்துரையாடலின் போது தமிழ்நாடு அரசின் முக்கிய திட்டங்களான – NEEDS Scheme, Startup Seed Fund Scheme, Annal Ambedkar Business Champions Scheme (AABCS), கலைஞர் கைவினைத் திட்டம் உள்ளிட்ட தொழில் முனைவோருக்கான வளர்ச்சி திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

உயிர்தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை இணைந்து TNAPEx வழியாக தொழில்நுட்ப வழிகாட்டுதல், தயாரிப்பு மதிப்பீடு, பகுப்பாய்வு ஆதரவு மற்றும் புதுமை வழிகாட்டுதலை வழங்குகின்றன. இத்திட்டம் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில் பயன்பாட்டுக்கு இடையிலான இடைவெளியைப் பூர்த்தி செய்து, MSMEகளுக்கு சந்தைப்படுத்துதலுக்கான தயாரிப்பு தீர்வுகளை உருவாக்க உதவுகிறது.

தமிழ்நாடு அரசு தென்னை நார் வணிக மேம்பாட்டுக் கழக தலைமைச் செயல் அதிகாரி முனைவர் ஆர். கண்ணன் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு. பி. சண்முகசிவா அவர்கள் MSMEகளுக்கான ஏற்றுமதி–இறக்குமதி வாய்ப்புகள், மின்னணு வணிக (e–commerce) தளங்கள், அரசு கொள்முதல் இணையதளம் மற்றும் உலகளாவிய சந்தைப்படுத்துதலின் முக்கியத்துவத்தினை விளக்கினார்.

துவக்க விழாவில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக உயிர்தொழில்நுட்ப மகத்துவ மைய இயக்குநர் முனைவர் ந. செந்தில் அவர்கள் தலைமையுரை வழங்கினார். தாவர உயிர்தொழில்நுட்பத் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஈ. கோகிலாதேவி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கோயம்புத்தூர் StartupTN மண்டல மைய திட்டத் தலைவர் திருமதி சி. காயத்ரி அவர்கள் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான செயல்திட்டம் மற்றும் StartupTN உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் புதுமை ஆதரவு திட்டங்களை கூறினார். உயிர்தொழில்நுட்பத் துறை துணை பேராசிரியர் முனைவர் வி. ராஜன்பாபு அவர்கள் நன்றி உரை வழங்கினார்.

இந்தப் பயிற்சித் திட்டம் MSMEகள், தொடக்க நிறுவனங்கள் மற்றும் அரசு துறைகளுடன் கூடிய ஒருங்கிணைந்த மேடையாகவும், கருத்துப்பகிர்வு, எதிர்கால வாய்ப்புகள் மற்றும் தமிழ்நாட்டின் நிலையான தொழில் வளர்ச்சி நோக்குடன் செயல்படுவதற்கான தளமாக அமைந்தது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**